# வேட்டை நாய்



குடந்தைக் கவிஞர்

# வேட்டை நாய்

குழந்தைக் கவிஞர்

அழ. வள்ளியப்பா

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

184, பிராட்வே, சென்னை-600108

Tamil

# VETTAI NAI

(Foreign Stories for Children)

| | | |
|---|---|---|
| Author | : | Al. Valliappa |
| Illustrator | : | 'Natanam' |
| Copyright | : | Author |
| Publisher | : | Kulandai Puthaka Nilayam, Madras-40 |
| Printer | : | Jeevan Press, Madras-5 |
| Sole Distributor | : | Paari Nilayam, Madras-108 |
| Fifth Edition | : | January 1987 |
| Price | : | Rs. 4-00 |

விலை நான்கு ரூபாய்

வெளியிட்டோர் :

**குழந்தைப் புத்தக நிலையம்**

சென்னை-40.

## கதைப் பெயர்கள்

1. வேட்டை நாய்

2, அபூர்வ நண்பர்கள்

3. பத்தாவது படகோட்டி

4. பணத்தின் மகிமை



# வேட்டை நாய்

'கொக்கரக்கோ!'

சேவல் கூவியது.

படுக்கையில் படுத்திருந்த சிறுவன் துள்ளி எழுந்தான். 'அம்மா! அம்மா!' என்று அழைத்துக் கொண்டே அம்மாவின் அருகிலே ஓடினான்.

"என்னடா, என் கண்ணே?" என்று அன்பாகக் கேட்டாள் அம்மா.

"அம்மா, மாமாவின் ஊருக்குப் போகப் போகிறேன். போகட்டுமா, அம்மா?"

இந்தக் கேள்வியைக் கேட்டதும் அம்மா புன்சிரிப்புடன், "என்ன, மாமா ஊருக்கா! அடேயப்பா! அது சமீபத்திலா இருக்கிறது? குறைந்தது நூறு மைலாவது இருக்குமே!" என்றாள்.

"இருக்கட்டுமே!......அம்மா, எனக்கு மாமாவைப் பார்க்க வேண்டுமென்று ஆசையாய் இருக்கிறது. மாமாவின் பிள்ளைகளைப் பற்றி அந்த வியாபாரித் தாத்தா சொன்னாரே; கேட்டாயா? அவர்களெல்லாம் 'ஹாக்கி' விளையாடுவதில் மிகவும் கெட்டிக்காரர்களாம். அற்புதமாக விளையாடுகிறார்களாம். எனக்கும்தான் ஹாக்கி விளையாடத் தெரியுமே! நானும் அங்கே போய் அவர்களுடன் சேர்ந்து விளையாடலாம் அல்லவா? எனக்கு விடை கொடுத்து அனுப்பு, அம்மா."

"என்ன! விடை கொடுத்து அனுப்புவதா! நீயோ சிறு பையன். இவ்வளவு தூரத்தில் உள்ள

மாமாவையும், அவருடைய குழந்தைகளையும் நீ போய்ப் பார்ப்பது என்பது சுலபமான காரியமா? வழியில் எத்தனையோ காடுகள்; மலைகள்; ஆறுகள்! அவ்வளவையும் நீ கடந்து செல்ல வேண்டும். சிறுபிள்ளைத்தனமாகப் பேசுகிறாயே!"

"என்னம்மா நீ இப்படிச் சொல்கிறாய்! நான் என்ன, கோழையா? அல்லது, கோழையான ஒரு குடும்பத்திலே பிறந்தவனா? என் அப்பாவைப் போல் நானும் ஒரு பெரிய வீரனாக வேண்டாமா?"

இதைக் கேட்டதும், அம்மாவின் கண்கள் கலங்கின. அதே சமயத்தில், மகனின் வீர வார்த்தைகள் அவளுக்கு இன்பத்தைக் கொடுத்தன.

"ஆமாம், நீ போகிறேன் என்கிறாயே! நீ மட்டும் தனியாகவா போகப்போகிறாய்? துணை வேண்டாமா?"

"துணையா! எதற்கு அம்மா? யாருமே என்னுடன் வரவேண்டாம். நான் மட்டுமே செல்லப் போகிறேன். என் அப்பாவைப்போல் நானும் வீரனாக வேண்டாமா? அதற்கு நல்ல அனுபவம் வேண்டாமா? எந்தத் திசையில் போகவேண்டும் என்பதை மட்டும் சொல்லிவிடு; நான் இன்றே புறப்பட்டுப் போகிறேன்."

"என்ன! இன்றே புறப்படப் போகிறாயா? அவசரப்படாதே! அந்த வியாபாரித் தாத்தா சொன்னது முழுவதையும் கேட்டாயா? உன் மாமா கூடிய சீக்கிரத்தில் இங்கு வரப் போகிறா

ராம். அவர் வரும்போது அவருடன் கூட நீயும் போகலாம்......''

"ஆமாம், அந்தத் தாத்தா அதுமட்டுமா சொன்னார்? யுத்தத்தில் ஈடுபட்டிருந்ததால், ஐந்தாறு வருஷங்களாக உள்நாட்டு விஷயங்களை மாமா கவனிக்க முடியாமலே போய்விட்டதாம். இப்போதுதான அவர் அவற்றை யெல்லாம் கவனிக்கிறாராம். அதனால் வேலை அதிகமாக இருக்கிறதாம். வேலை அதிகமாக இருக்கும் போது, மாமா எப்படிச் சீக்கிரத்தில் இங்கு வர முடியும்? நான் போய், அவரை அழைத்து வரு கிறேன். விடை கொடு, அம்மா!''

அம்மா எவ்வளவோ கூறிப் பார்த்தாள். ஆனால், அந்தச் சிறுவன் விடவில்லை. அம்மா வைச் சமாதானப்படுத்தி, ஒருவழியாக அவளு டைய அனுமதியைப் பெற்றுவிட்டான்!

∴ ∴ ∴

ஸெதாந்தா—இதுதான் அந்தப் பையனின் பெயர். அவனுக்கு வயது இன்னும் ஒன்பது கூடப் பூர்த்தியாகவில்லை. அந்த வயதிலேயே அவன் மிகவும் தைரியசாலியாக இருந்தான்.

ஸெதாந்தாவின் மாமாதான் அந்த நாட்டு அரசர். அந்த நாட்டுக்கும், அடுத்த நாட்டுக்கும் ஐந்தாறு ஆண்டுகளாகக் கடுமையான போர் நடந்து கொண்டிருந்தது.

போர் ஆரம்பமாவதற்கு முன்பு, தலைநகரி லிருந்து நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு

மண்டலத்தில், ஒரு பெரிய படையின் தலைவராக இருந்தார், ஸெதாந்தாவின் அப்பா. போர் மிகவும் கடுமையாக நடந்து கொண்டிருந்த போது, ‘உடனே ஒரு பெரிய படையுடன் புறப்பட்டு வரவும்,’ என்று ஸெதாந்தாவின் அப்பாவுக்கு அரசரிடமிருந்து உத்தரவு வந்தது. மனைவியை யும், மகனையும் அங்கேயே விட்டுவிட்டு, ஒரு பெரிய படையுடன் புறப்பட்டார், அப்பா.

எதிரிகளை மிகவும் கடுமையாக எதிர்த்துப் போரிட்டார்கள். வெற்றியோ தோல்வியோ யாருக்கும் கிடைக்கவில்லை. எதிரிகளை இவர்கள் தாக்குவதும், இவர்களை எதிரிகள் தாக்குவது மாகப் போர் நடந்துகொண்டே இருந்தது.

ஒரு நாள் ஸெதாந்தாவின் அப்பா எதிரிகளை எப்படியும் முறியடித்து விடுவது என்று தீர்மா னித்துத் தம்முடைய படையுடன் முன் நோக்கிச் சென்றார்; வீரமாகப் போரிட்டார். ஆனால், அவர் உயிருடன் திரும்பவில்லை; போர்க் களத்திலே இறந்துவிட்டார்! வீரசொர்க்கம் அடைந்தார்.

அவர் இறந்த செய்தியைக் கேட்டதும் ஸெதாந்தாவும், அவன் அம்மாவும் அடைந்த துயருக்கு அளவே இல்லை. வாடினர்; வருந்தினர்; கண்ணீர் விட்டனர்; கதறி அழுதனர்.

ஆனால், இது நடந்து இப்போது இரண்டு ஆண்டுகள் கழிந்துவிட்டன போரில் எதிரிகள் முறியடிக்கப்பட்டனர். ஸெதாந்தாவின் மாமா வெற்றிமாலை சூடி வீடு திரும்பினார்.

போர் நடந்த காலத்தில் நாட்டு மக்களின் நலத்தை அவரால் கவனிக்க முடியாமல் போய்

விட்டது. ஐந்தாறு ஆண்டுகளாகக் கவனிக்கா மல் விடுபட்டுப்போன வேலைகளை இப்போது தான் அவசர அவசரமாகக் கவனித்து வருகிறார், அரசர். "நம் தங்கையையும் தங்கை மகனையும் காணவேண்டும். அவர்களுக்கு ஆறுதல் கூறி நம்முடன் இங்கு அழைத்துவர வேண்டும்" என்று அரசர் நினைத்தார். ஆனால், வேலை மிகுதியால் நினைத்தபடி உடனே போக முடியவில்லை. குறைந்தது ஒன்றிரண்டு மாதங்கள் சென்றுதான் போக முடியும் போல் தோன்றியது.

அவருக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவனுக்கு வயது 14; அடுத்தவனுக்கு வயது 11; மூன்றாவது பையனுக்கு வயது 9. மூவரும் ஹாக்கி விளை யாடுவதில் நிபுணர்கள்! தினந்தோறும் காலை யிலும் மாலையிலும் அரண்மனைக்கு அருகேயுள்ள மைதானத்தில், மற்ற பிரபுக்களின் குழந்தை களுடன் ஹாக்கி விளையாடிக் கொண்டிருப் பார்கள்.

அரசரைப் பற்றியும், அவருடைய குழந்தை களைப் பற்றியும் ஓரளவு தெரிந்து வைத்திருந் தார், ஒரு வயோதிக வியாபாரி. அவர் ஆண்டுக்கு இரண்டு அல்லது மூன்று தடவைகள் ஸெதாந்தா இருக்கும் ஊருக்கு வியாபார விஷய மாக வருவார். அப்படி வரும்போதெல்லாம் அவர் ஸெதாந்தாவையும் அவன் அம்மாவையும் பார்க்காமல் திரும்ப மாட்டார். பார்க்கும்போது, அரசரைப் பற்றியும், அவருடைய குழந்தைகளைப் பற்றியும் தமக்குத் தெரிந்தவற்றை யெல்லாம் கூறுவார். ஸெதாந்தாவும் அவன் அம்மாவும் ஆவலோடு கேட்பார்கள்.

அன்று இரவு அந்த வியாபாரி ஸெதாந்தா வின் வீட்டுக்கு வந்திருந்தார். அவர் கூறியதைக் கேட்டதிலிருந்துதான் ஸெதாந்தாவுக்கு மாமா வின் ஊருக்குச் செல்ல வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.

∴ ∴ ∴

ஸெதாந்தா காடுகளைக் கண்டு கலங்கிவிட வில்லை; மலைகளைக் கண்டு மலைத்துவிடவில்லை; ஆறுகளைக் கண்டு அயர்ந்துவிடவில்லை. தைரி யத்துடனும், நம்பிக்கையுடனும் எல்லாவற்றை யும் எளிதிலே கடந்து தலைநகருக்கு வந்து விட்டான்!

தலைநகரை அடைந்ததும், அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. 'ஆ! நாம் தலை நகரை அடைந்துவிட்டோம்! நம் மாமாவை இன் னும் சிறிது நேரத்தில் காணப் போகிறோம்; மாமா வின் பிள்ளைகளுடன் அளவளாவி மகிழப் போகி றோம்' என்றெல்லாம் நினைத்துக்கொண்டே அரண்மனையை நோக்கி நடந்தான்.

அரண்மனையை அவன் நெருங்கும் சமயம். அப்போது, அங்கிருந்த மைதானத்தில் சில சிறு வர்கள் ஹாக்கி விளையாடிக் கொண்டிருப்பதை அவன் கண்டான். உடனே, அவர்கள் விளையா டும் இடத்திற்கு அருகே சென்றான்; கூர்ந்து பார்த்துக்கொண்டே நின்றான்.

அங்கே விளையாடுபவர்களில் மூன்று சிறுவர் கள் ஒரே மாதிரி உடை அணிந்திருந்தனர். ஆடம் பரமாகவும், அழகாகவும் அவர்களுடைய

உடைகள் இருப்பதைக் கண்டதும், 'இவர்கள் தான் நம்முடைய மாமாவின் பிள்ளைகளாக இருக்கவேண்டும். கூட விளையாடுபவர்கள் பிரபுக்களின் குழந்தைகளாக இருக்கலாம்' என்று நினைத்தான், ஸெதாந்தா.

அசையாமல் நின்ற இடத்திலேயே நின்று ஆட்டத்தைக் கவனித்தான். ஆட்டம் வெகு மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. ஆட்டத்தைப் பார்க்கப் பார்க்கத் தானும் அவர்களுடன் சேர்ந்து பந்தாட வேண்டுமென்று துடி துடித்தான்.

அப்போது. ஒருவன் தன் கையிலிருந்த மட்டையால் (Hockey Stick) ஓங்கிப் பந்தை அடித்தான். பந்து தரையில் வேகமாக உருண்டோடிக் கொண்டிருந்தது. அப்போது, எதிரில் நின்ற இன்னொரு சிறுவன் அதை எதிர்த்து அடிக்க முயன்றான். ஆனால், அவனது குறி தவறி விட்டது. பந்து அவனையும் தாண்டி வேகமாக வந்துகொண்டிருந்தது. அந்தப் பந்தைக் கண்டதும், ஸெதாந்தாவினால் சும்மா இருக்க முடியவில்லை. 'குபீ'ரென்று விளையாட்டு எல்லைக்குள் பாய்ந்தான். தன்னுடன் கொண்டுவந்திருந்த பந்தடிக்கும் மட்டையால் அந்தப் பந்தை எதிர்த்துப் பலமாக அடித்தான். அடித்ததோடு நிற்கவில்லை; அதைத் தொடர்ந்து ஓடவும் ஆரம்பித்தான்.

பூசை வேளையில் கரடி புகுந்தது போல், எவனோ ஓர் அன்னியன் திடீரென்று ஆட்டத்தில் வந்து புகுந்ததைக் கண்டதும், அந்தச் சிறுவர்கள் எல்லோரும் கூச்சல் போட ஆரம்பித்தனர்! சிலர் அவனைப் பிடித்து இழுத்து நிறுத்த முயன்றனர்; முடியவில்லை. அவன் எல்லோரையும் தள்ளிக்

கொண்டு பந்தைத் தொடர்ந்து ஓடினான். கோபம் கொண்ட சிலர் அவனைப் பிடித்து அடிக்க ஓடினர்.

கூச்சல் பலமாகக் கேட்கவே அரண்மனைக் குள்ளிருந்த அரசர் உப்பரிகை வழியாக எட்டிப் பார்த்தார். எவனோ ஒரு சிறுவன் அங்கு வந்து ஆட்டத்தைக் கலைப்பதாக அறிந்தார். உடனே, சேவகர்களை அனுப்பி அவனைப் பிடித்து வர உத்தரவிட்டார்.

சேவகர்கள் ஸெதாந்தாவைப் பிடித்து வந்தனர்; அரசர் முன் நிறுத்தினர்.

அரசர் அவனைப் பார்த்து, "ஏ பையா, நீ யார்?" என்று கோபமாகக் கேட்டார்.

"அரசே, நான் யாரென்பது தெரிந்தால் தாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைவீர்கள்!" என்று தலைநிமிர்ந்து கூறினான், ஸெதாந்தா

என்ன!... அப்படியா!"

"ஆம் அரசே! இந்த நாட்டுக்காகத் தம்முடைய உயிரையே கொடுத்த மாபெரும் வீரனின் மகன்தான் நான்!"

இதைக் கேட்டதும், அரசருக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனாலும், அவருக்கு அவன் யார் என்பது சரியாகத் தெரியவில்லை.

"என்ன! உன் தந்தை இந்த நாட்டுக்காக உயிரைக் கொடுத்தாரா?"

"ஆம், என் தந்தை நாட்டுக்காக உயிரைக் கொடுத்தார். என் தாய் இந்த நாட்டு அரசரின் கூடப் பிறந்தாள்...!"

"என்ன! நீ சொல்வது ஒன்றும் விளங்க வில்லையே!"

"இன்னும் கொஞ்ச நேரம் சென்றால், தானாக விளங்கிவிடும்!"

அரசர் சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந் தார். பிறகு, "அப்படியானால், உன் பெயர்...?"

"என் பெயர் ஸெதாந்தா!"

"என்ன! என் தங்கை மகன் ஸெதாந்தாவா!" என்று ஆச்சரியத்துடன் கூறிக்கொண்டே அவன் அருகே ஓடினார்; அவனை அப்படியே கட்டி அணைத்து முத்தமிட்டார்.

"ஸெதாந்தா, அம்மா சுகமாயிருக்கிறாளா? நீ எப்படி இங்கு வந்தாய்? நீ மட்டும்தான் வந் தாயா? அல்லது, அம்மாவும் வந்திருக்கிறாளா?" என்று படபடப்புடன் கேட்டார், அரசர்.

"நான் மட்டுமே வந்தேன். அம்மா ஊரில் இருக்கிறாள். உங்களையும் உங்கள் பிள்ளைகளை யும் காணவே இவ்வளவு தூரம் நடந்து வந்தேன். ஆனால், நானாக வந்து உங்களைக் காண்பதற்குள் உங்களுக்கு அவசரம்! சேவகர்களை அனுப்பி என்னை அழைத்துவரச் செய்துவிட்டீர்கள்!" என்று சிரித்துக் கொண்டே கூறினான், ஸெதாந்தா.

இதைக் கேட்டதும், அரசருக்கும் சிரிப்பு வந்துவிட்டது. சேவகர்கள் ஆச்சரியத்துடன் ஸெதாந்தாவையும், அரசரையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே நின்றனர்.

உடனே அரசர், ஆவலாகத் தம்முடைய பிள்ளைகளை அழைத்தார். "இதோ பாருங்கள்,

இவன்தான் உங்கள் அத்தை மகன் ஸெதாந்தா. கெட்டிக்காரப் பையன்'' என்று கூறி அவனை அறிமுகப்படுத்தி வைத்தார்.

உடனே அரசரின் மூன்று பிள்ளைகளும் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். ஒருவன், ஸெதாந்தாவின் தோளிலே கை போட்டான்; மற்றொருவன் அவன் கையைப் பிடித்துக் குலுக்கினான். கடைக் குட்டிப் பையன் அவன் வயிற்றிலே வேடிக்கையாக ஒரு குத்துக் குத்தி, ''அடே, நீ பந்தாடுவதில் பெரிய சூரனாக இருப்பாய் போலிருக்கிறதே!'' என்றான்.

பிறகு அரசர் ஸெதாந்தாவிடம், ''போர் முடிந்ததுமே அம்மாவையும் உன்னையும் காணவேண்டும் என்று நினைத்தேன். அங்கு வந்து திரும்புவதற்குக் குறைந்தது ஒரு வாரமாவது ஆகும். அவகாசமே கிடைக்கவில்லை. எப்படியும் இன்னும் ஒரு மாதத்திற்குள் வருவதென்றுதான் இருந்தேன்...சரி, வா, அப்புறம் சாவதானமாகப் பேசிக் கொள்ளலாம். முதலில் குளித்துச் சாப்பிடு. பசியுடன் இருப்பாய்'' என்று அவனை அழைத்துச் சென்றார்.

ஸெதாந்தா குளித்து முடித்தான். அவனுக்கு அழகான உடை, அறுசுவை உணவு எல்லாம் கொடுக்கப்பட்டன.

அன்றைய தினமே, 'ஸெதாந்தா சுகமாக வந்து சேர்ந்துவிட்டான்' என்று அவனுடைய அம்மாவுக்கு அரசர் ஆள் மூலம் சொல்லி அனுப்பினார். அத்துடன் 'இன்னும் ஒரு மாதத்துக்குள் ஸெதாந்தாவுடன் அங்கு வருகிறேன்' என்றும் கூறி அனுப்பினார்.

அன்று முதல் ஸெதாந்தா அவனுடைய மாமாவின் பிள்ளைகளுடன் காலையிலும் மாலையி லும், ஹாக்கி விளையாட ஆரம்பித்தான். ஒரு வாரத்துக்குள், அவன் ஹாக்கி விளையாடுவதில் பெரிய நிபுணனாகி விட்டான்! அவன் ஆட்டத் தைப் பார்த்தவர்களெல்லாம் அவனை வாயார வாழ்த்தினார்கள்; மனமாரப் போற்றினார்கள்.

∴ ∴ ∴

அன்று மாலை நேரம். அரண்மனை வாயிலில் அழகான இரு குதிரைகள் பூட்டப்பட்ட ஒரு வண்டி நின்று கொண்டிருந்தது. அரண்மனைக் குள்ளிருந்து, அந்த வண்டியை நோக்கி அரசரும், அவருடன் கூட ஒரு பிரபுவும் வந்தார்கள்.

வண்டியை நெருங்கியதும், "அரசே, தாங்கள் முதலில் ஏறி அமருங்கள்" என்று பணிவுடன் கூறினார் பிரபு.

அரசர் வண்டியில் ஏறினார். பிறகு பிரபுவும் ஏறிக் கொண்டார். வண்டி புறப்பட்டது.

அரசரின் பக்கத்திலே இருந்த பிரபு, ஒரு சாதாரணப் பிரபு அல்ல; அந்தத் தலைநகரிலே அவர்தான் மிகவும் பெரிய பிரபு! அவருடைய பங்களாவில் அரசருக்காக ஒரு பெரிய விருந்து ஏற்பாடு செய்திருந்தார். அந்த விருந்துக்காகத் தான் அரசரை அவர் அழைத்துக்கொண்டு போனார்.

வண்டி சிறிது தூரம் சென்றிருக்கும். அப் போது பக்கத்து மைதானத்தில் 'ஹாக்கி' விளை யாடிக் கொண்டிருந்த சிறுவர் கூட்டத்தைக்

கண்டார், அரசர். அந்தக் கூட்டத்தில் ஸெதாந்தா சுறு சுறுப்பாகவும், உற்சாகத்துடனும் ஆடுவதைப் பார்த்தார். உடனே, அவருக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது.

பக்கத்திலிருந்த பிரபுவிடம், "அதோ பாரும், அந்தப் பையன் யார் தெரியுமா?" என்று கேட்டார்.

பிரபு சிறிது நேரம் அவனைப் பார்த்துவிட்டு, "ஆம் அரசே, அவன் யார்? புதுப் பையனாக இருக்கிறானே!" என்று கேட்டார்.

"உமக்குப் புதியவன்; ஆனால், எனக்கு அவன் உறவினன். என் தங்கை மகன்தான் அவன்."

இதைக் கேட்டதும் பிரபு மிகவும் ஆச்சரியத்துடன், "நான் நினைத்தது சரியாகத்தான் இருக்கிறது. பையனைப் பார்த்ததுமே, 'இவன் அரச குடும்பத்தைச் சேர்ந்தவனாக இருப்பானோ!' என்று சந்தேகப்பட்டேன். நான் நினைத்ததில் தவறே இல்லை. தங்கை மகன் வருங்காலத்தில் பெரிய வீரனாக வருவான். சந்தேகமே இல்லை... அது சரி...அரசே, விருந்துக்கு அந்தப் பையனையும் அழைத்துச் செல்ல நான் விரும்புகிறேன். அழைத்துச் செல்லலாமா?" என்று கேட்டார்.

"உமது விருப்பம்போல் செய்யலாம்" என்றார், அரசர்.

உடனே பிரபு, வண்டியை நிறுத்தச் சொன்னார். வண்டி நின்றது. "ஸெதாந்தா! ஸெதாந்தா!"


என்று அரசர் அழைத்தார். ஸெதாந்தாவின் காதுகளில் அரசரின் குரல் விழவில்லை; அவன் தான் மும்முரமாக ஹாக்கி விளையாடிக் கொண்டிருக்கிறானே!



"ஸெதாந்தா! உன்னை அரசர் அழைக்கிறார். அதோ பார்!" என்று மற்றவர்கள் கூறியபோது தான் ஸெதாந்தாவுக்கு அரசர் தன்னை அழைக்கிறார் என்பது தெரிந்தது. உடனே, ஆட்டத்தை நிறுத்தி விட்டு அந்தக் குதிரை வண்டியை நோக்கி அவன் ஓடி வந்தான்.

"ஸெதாந்தா, இதோ இருக்கிறாரே, இந்தப்பிரபு வீட்டில் இன்று ஆறு மணிக்கு ஒரு விருந்து நடக்கப் போகிறது. அதற்கு நீயும் வரவேண்டுமாம். வா, வண்டியில் ஏறிக்கொள்" என்றார் அரசர்.

“மாமா, இன்னும் ஆட்டம் முடியவில்லை. நான் இப்போது நடு ஆட்டத்தில் வந்தால் மற்றவர்களுக்குச் சங்கடமாக இருக்கும்.



ஆகையால், இந்த ஆட்டம் முடிந்த பிறகு நான் வருகிறேன். நீங்கள் முன்னால் செல்லுங்கள். நான் வந்து விடுகிறேன். விலாசத்தை மட்டும் கூறி விட்டுச் செல்லுங்கள்'' என்ருன்.

“தம்பி, என் பங்களா சுமார் இரண்டு மைல் தூரத்தில் இருக்கிறது. நீ மட்டும் தனியாகவா வரப்போகிருய்?'' என்று கேட்டார், பிரபு.

“கவலைப்படாதீர்கள். நான் வந்து விடுவேன். ஊரிலிருந்தே நான் தனியாகத்தானே நடந்து வந்தேன்!'' என்ருன் ஸைதாந்தா.

“சரி, சீக்கிரம் வந்துவிடு'' என்று கூறி, பிரபு வின் வீட்டு விலாசத்தைக் கொடுத்து விட்டு அரசர் வண்டியை விடும்படி கூறிஞர். வண்டி நகர்ந்தது.

∴ ∴ ∴

பிரபுவின் வீட்டில் ஒரே தடபுடலாக இருந் தது. பிரபுக்களும், அரசாங்க அதிகாரி களும் வரிசை வரிசையாக வந்து கொண்டிருந் தனர். பிரபு எல்லோரையும் வரவேற்று உபசரித் துக் கொண்டிருந்தார்.

அரசர், அங்கிருந்த மிகவும் அழகான ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தார். வந்தவர்கள் ஒவ் வொருவராய் அவருக்கு வணக்கம் செலுத்தி விட்டு அவரவர் இடத்தில் போய் அமர்ந்தனர்.

மணி ஆறு அடித்தது.

பிரபு அரசரின் அருகே வந்தார். “அரசே, எல் லோரும் வந்துவிட்டார்கள். விருந்தை ஆரம்பிக் கலாம் என்று நினைக்கிறேன். தங்கள் அபிப் பிராயம்...'' என்று இழுத்தார்.

அப்பொழுது அரசருக்கோ அல்லது அந்தப் பிரபுவுக்கோ ஸெதாங்தாவைப் பற்றிய நினைவே இல்லை. விருந்தினரை உபசரிக்கும் வேலையில் பிரபு அவனை மறந்துவிட்டார். அரசரும் வந்திருந்த சில பிரபுக்களுடன் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்ததால், அவனைப் பற்றியே நினைக்கவில்லை.

"ஓ! தாராளமாக ஆரம்பிக்கலாம்" என்றார். அரசர்.

'சரி, கதவுகளை யெல்லாம் தாழிடும்படி சொல்லி விட்டேன். எதிரிகள் எவரும் வராமல் வெளியில் காவலும் வைத்துவிட்டேன்."

"யார், உம்முடைய ஆட்களே காவல் இருக்கிறார்களா? அல்லது அரண்மனை ஆட்களா?"

"ஆட்கள் எதற்கு? என்னுடைய வேட்டை நாய்தான் காவலாக இருக்கிறது! அது மிகவும் பொல்லாத நாய். அதைக் கண்டாலே எதிரிகளுக்குப் பயம்தான்! ஒரு தடவை முப்பது நாற்பது பேர் இங்கே கொள்ளையடிக்க வந்தார்கள். அவர்களை யெல்லாம் மூலைக்கு ஒருவராக ஓடும்படி அது விரட்டியது இருக்கிறதே, அடேயப்பா! அதைப் பற்றிச் சாவதானமாகச் சொல்ல வேண்டும்" என்றார் பிரபு.

பிறகு, விருந்து ஆரம்பமானது. எல்லோரும் தட்டுகளைக் காலி செய்யும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டனர்.

∴ ∴ ∴

ஸெதாங்தா ஆட்டத்தை முடித்துக்கொண்டு புறப்பட்டான். புறப்படும்போதே மணி ஆறாகி விட்டது.

பந்தைத் தெருவில் போட்டு, மட்டையால் அடித்துக்கொண்டே சென்றான். விளையாட்டாகச் சென்றதால், வெகு சீக்கிரத்தில் பிரபுவின் பங்களாவை நெருங்கிவிட்டான்.

பங்களாவை நோக்கி அவன் வருவதைக் கண்டதும், அங்கு காவல் காத்துக் கொண்டிருந்த வேட்டை நாய் குரைக்க ஆரம்பித்தது. அதன் பெரிய உடலையும், கனத்த குரலையும், கத்தி போன்ற பற்களையும் யாராவது பார்த்தால், உடனே பயந்து விடுவார்கள். ஆனால், ஸெதாந் தாவா அதற்கெல்லாம் பயப்படுகிறவன்? பந்தைக் கையில் எடுத்துக் கொண்டு, நாய் நிற்கும் இடத்தை நோக்கி நடந்தான்.

பயப்படாமல் அவன் அருகே வருவதைக் கண்டதும், நாயின் கோபம் அதிகமாகிவிட்டது. வாயை 'ஆ' என்று பிளந்துகொண்டு, அவனை நோக்கிப் பாய முயன்றது. அதற்குள், ஸெதாந்தா தன் கையிலிருந்த பந்தை மேலே தூக்கினான். திறந்திருந்த நாயின் வாய்க்குள் 'லபக்'கென்று போட்டுவிட்டான்! போட்டதோடு நிற்கவில்லை; கையிலிருந்த மட்டையால் அந்தப் பந்தைத் தொண்டைக்குள் நன்றாகக் குத்தித் தள்ளி விட்டான் !

பாவம், அந்த வேட்டை நாயால் பந்தை வெளியே கக்கவும் முடியவில்லை; உள்ளே விழுங் கவும் முடியவில்லை. திணறித் திண்டாடிக்கொண் டிருந்தது. 'இதுதான் சமயம்' என்று நினைத்த ஸெதாந்தா மட்டையால் அதன் தலையிலே பலமாக ஐந்தாறு அடிகள் வைத்தான். அவ்வளவு தான்! அந்த நாய் அங்கேயே சுருண்டு விழுந்து

விட்டது. ஸெதாந்தா திரும்பவும் காலைந்து அடிகள் கொடுத்தான். பிறகு வாலைப் பிடித்துப் 'பரபர' என்று இழுத்தான். அப்புறமும் அந்த நாய் பிழைத்திருக்குமா, என்ன? அதன் மூச்சு நின்று விட்டது!

"ஆயுள் முடிந்தது!" என்று குதூகலத்துடன் உரக்கக் கத்தினான், ஸெதாந்தா. அந்தச் சப்தம் உள்ளே விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களின் காதுகளில் அரைகுறையாக விழுந்தது. உடனே அரசருக்கு ஸெதாந்தாவைப் பற்றிய நினைவு வந்தது. "ஐயோ! என் தங்கை மகன் வருவதாகச் சொன்னானே! ஒரு வேளை அவனைத்தான் வேட்டை நாய் கடித்து விட்டதோ!" என்று கூறிக்கொண்டே வாயிலை நோக்கி ஓடினார். அவரைத் தொடர்ந்து பிரபுவும், மற்றும் சிலரும் ஓடினார்கள்.

வெளியே வந்ததும், வெற்றி முழக்கத்துடன் நிற்கும் ஸெதாந்தாவை அவர் கண்டார்; அவன் பக்கத்திலே செத்துக் கிடக்கும் வேட்டை நாயையும் கண்டார். உடனே அவர் ஓடிப்போய் ஸெதாந்தாவைக் கட்டிப்பிடித்துக்கொண்டு, "நல்லவேளை; நீ பிழைத்தாய்" என்றார்.

"இல்லை, கெட்ட வேளை; என் நாய் செத்து விட்டது!" என்று வருத்தத்துடன் கூறிக்கொண்டே நாயின் அருகே ஓடினார், பிரபு. அது மூச்சின்றிக் கிடப்பதைக் கண்டார்; பெருந்துயர் அடைந்தார்.

பிரபுவின் வருத்தத்தை உணர்ந்தான் ஸெதாந்தா. உடனே அவர் அருகிலே ஓடினான்.

"பிரபுவே, என்னை மன்னிக்க வேண்டும். உங்களுடைய நாயை நான் வேண்டுமென்று கொல்லவில்லை. இப்போது அது இறந்து கிடக்கிறது. நான் உயிருடன் இருக்கிறேன். இல்லாவிடில், நான் இறந்திருப்பேன். அது உயிரோடு இருந்திருக்கும். நடந்ததை நினைத்து வருந்துகிறேன். தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டுகிறேன்" என்று அவரைப் பார்த்துக் கெஞ்சிக் கேட்டான் ஸெதாந்தா.

அதற்குள் அரசர் பிரபுவைப் பார்த்து, "ஏதோ எதிர்பாராத விதமாக நடந்துவிட்டது. என்ன செய்வது? வருத்தப்படாதீர்கள். இதே ஜாதியில் வேறு ஒரு வேட்டை நாய் வாங்கிக் கொள்ளலாம்" என்றார்.

ஆனால், பிரபு அரசரைப் பார்த்து, "அரசே, நான் இதைச் சிறு குட்டியிலிருந்து வளர்த்து வந்தேன். மிகவும் நன்றியுடன் இன்றுவரை எங்கள் குடும்பம், சொத்து, சுகம், எல்லாவற்றையும் பத்திரமாகவும், வீரத்துடனும் இது பாதுகாத்து வந்திருக்கிறது. இனி, எதிரிகளுக்குக் கொண்டாட்டம்தான்! சிறு வயது முதல் இங்கே வளர்ந்ததால்தான் இது இவ்வளவு நன்றியறிதலுடன் இருந்து வந்தது. பெரிய நாயை வாங்கி எவ்வளவுதான் அன்பாக ரொட்டியும், கறியும் ஊட்டி ஊட்டி வளர்த்தாலும் இதற்கு ஈடாகுமா?" என்று கண் கலங்கக் கூறினார், பிரபு.

ஸெதாந்தாவுக்கு மிகுந்த வருத்தமாக இருந்தது. "நம்மால்தானே இந்தக் கஷ்டம் ஏற்பட்டது!" என்று அவன் நினைத்தான். உடனே யோசனையில் ஆழ்ந்தான். ஒரு முடிவுக்கு வந்தான்.


பிரபுவைப் பார்த்து, ''ஐயா, நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். இதே ஜாதியில் ஒரு நாய்க் குட்டியை வாங்கி நாம் வளர்ப்போம். அது நன்ருக வளர்ந்து, உங்கள் குடும்பத்தையும், உங்கள் சொத்து சுகங்களையும் நன்ருகக் காவல் காக்கும் வரை உங்களுக்கு வேறு வேட்டை நாயே தேவையில்லை. இதோ இறந்து கிடக்கும் வேட்டை நாய்க்குப் பதில், நானே உங்கள் வீட்டில் வேட்டை நாய்போல் இருந்து, காவல் காத்துவரப் போகிறேன். ஆம், தீர்மானித்து விட்டேன். இது நிச்சயம். இது சத்தியம், இனி உங்கள் வேட்டை நாய் நான் தான்; நானேதான்!'' என்று வீரமாகக் கூறினுன்.

அவன் வார்த்தையைக் கேட்டு அரசர் திகைத்தார்; பிரபு மலைத்தார்; கூடியிருந்தவர்கள் வியந்தனர்.

'வேட்டை நாயாக இருப்பேன்' என்று சொன்னதோடு ஸெதாந்தா நின்று விடவில்லை. அன்று முதல் பல வருஷங்கள் வேட்டை நாய் போலவே இருந்து, அந்தப் பிரபுவின் வீட்டைக் காத்துவந்தான். எல்லோரும் அன்று முதல் அவனை 'சுலைன்' என்று அழைக்க ஆரம்பித்தனர். சுலைன் என்ருல் அந்த நாட்டில் 'வேட்டை நாய்' என்று பொருள்.

ஸெதாந்தா பெரியவனுன பிறகு, சாதாரண ஒரு மனிதனுக அவன் இருக்கவில்லை. ஒரு பெரிய போர் வீரனுகவே விளங்கினுன்; போர் வீரனுகவே வாழ்ந்தான்; போர் வீரனுகவே இறந்தான். 'ஸெதாந்தா' என்ற பெயர் அயர்லாந்தில் அநேகமாக எல்லோருக்குமே தெரிந்தபெயராகிவிட்டது!

போர்க்களத்தில் அவனைக் கண்டாலே எதிரிகளுக்கு நடுக்கம்தான்! 'டேய், 'சுலேன்' (வேட்டை நாய்) வருகிறது! ஓடிவாருங்கள்; ஓடிவாருங்கள்!' என்று கூவிக்கொண்டே எதிரிகள் புறமுதுகு காட்டி ஓட ஆரம்பித்து விடுவார்கள்; அவ்வளவு பயம்!



அயர்லாந்துக் கதை



# அபூர்வ நண்பர்கள்

அவன் ஒரு கைதி!

ஆம், கைதிதான்! ஆனால், அவன் எதற்காகக் கைது செய்யப்பட்டான்?

கொள்ளை அடித்ததற்காகவா?

இல்லை.

கொலை செய்ததற்காகவா?

அதுவும் இல்லை.

அப்படியானால், அவன் யாரையாவது கொலை செய்ய முயன்றானோ?

அதெல்லாம் ஒன்றுமில்லை.

அப்படியானால், எதற்காக அவனைக் கைது செய்தார்கள்?

அவனுக்கு அரசரின் போக்கு பிடிக்கவில்லை. அரசன் செய்துவரும் கொடுமைகளை அவன் பகிரங்கமாகப் பேசினான். கொடுங்கோல் ஆட்சியை ஒழிக்க வேண்டும் என்று மக்களிடம் கூறினான்.

இதனால்தான் அவன் இப்போது கைதியாக நிற்கிறான். 'ராஜத் துரோகி' என்று அவன் மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

அரசன் முன் அவனைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அரசன் அவனைப் பார்த்தான்.

"ஏ ராஜத்துரோகி! நீ எம்மைப் பற்றிக் கேவலமாகப் பேசினாயாமே! உண்மையா?"

"உங்களைப் பற்றி நான் கேவலமாகப் பேசவில்லை. உங்களுடைய அரசாட்சியைப் பற்றித்தான் கேவலமாகப் பேசினேன்!"

"என்ன! எம்மைப் பற்றிப் பேசினால் என்ன! எம்முடைய ஆட்சியைப் பற்றிப் பேசினால் என்ன? இது ஒரு பெருங் குற்றம் என்பது உனக்குத் தெரியுமா?"

"கொடுங்கோல் ஆட்சியை நான் எதிர்த்தேன். அதைக் குற்றம் என்று நீங்கள் கூறுகிறீர்கள்! நாட்டுக்காக நான் பாடுபட்டேன். அதை நாச வேலை என்று நீங்கள் கருதுகிறீர்கள். தேசத்திற்காக நான் உழைத்தேன். அது மிகவும் தீமையானது என்று நீங்கள் தீர்மானம் செய்கிறீர்கள்..."

"சட்...நிறுத்து! உனக்கு என்ன திமிர்! நீ செய்த குற்றத்திற்கு என்ன தண்டனை தெரியுமா? தூக்குத் தண்டனைதான்!"

"அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. சாவதற்குத் தயாராகவே வந்திருக்கிறேன்."

"உனக்கு என்ன துணிச்சல்!... சரி, உன்னுடன் நாம் பேசவிரும்பவில்லை. உனக்குத் தூக்குத் தண்டனை விதித்து இருக்கிறோம்" என்று அரசன் ஆத்திரத்துடன் கூறிவிட்டு, "இவனைக் கொண்டு செல்லுங்கள்" என்று உத்தரவிட்டான்.

அதே சமயம் ஒரு காவற்காரன் அங்கு வந்து "அரசே, வணக்கம். யாரோ ஒருவர் வாயிலில்

காத்திருக்கிறார். தங்களைக் காணவேண்டுமாம்'' என்று கூறினான்.

"யாரது?... சரி, உள்ளே வரச்சொல்'' என்று உத்தரவிட்டான் அரசன்.

உள்ளே வந்தான், ஒரு வாலிபன். அவனைக் கண்டதும், கைதியாக இருந்தவன், "நண்பா!'' என்று ஆனந்தத்துடன் வரவேற்றான்.

"ஆ! உன்னைத் தேடி......'' சரியாக வாக்கியத்தை முடிக்கவில்லை வந்தவன்.

அதற்குள், அரசன் வந்தவனைப் பார்த்து, "நீ யார்? எதற்காக இங்கே வந்தாய்? என்ன விஷயம்? உடனே சொல். உம்!......'' என்று மடமடவென்று கேட்டான்

"அரசே, இதோ கைதியாக நிற்பவன் என்னுடைய நண்பன்; மிகவும் உத்தமன். உங்களை மிகவும் வேண்டிக் கொள்கிறேன். தயவு செய்து இவனை விடுதலை செய்யுங்கள். உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து......''

"போதும், நிறுத்து. இது அரச சபை. தயவு தாட்சண்யத்திற்கெல்லாம் இங்கு இடமே கிடையாது. அவனை விடுதலை செய்ய முடியாது. அவனுக்குத் தூக்குத் தண்டனை விதித்தாயிற்று.''

"என்ன! தூக்குத் தண்டனையா! என் அருமை நண்பனுக்கா! ஐயோ! அவனைப் போன்ற ஓர் உத்தமனை இந்த உலகத்தில் பார்க்கவே முடியாதே! அரசே, அவனுக்குத் தூக்குத் தண்டனை வேண்டாம். கருணை காட்டுங்கள்.''

"தண்டனை விதித்தது விதித்ததுதான்! கடவுளே நேரில் வந்தாலும் மாற்ற முடியாது. ஆனால், ஒன்று மட்டும் செய்யலாம். இறப்பதற்கு முன்னால் உன் நண்பனுக்கு விருப்பமானதைக் கேட்கச் சொல். முடியுமானால் தருகிறேன்."

இதைக் கேட்டதும் கைதி அரசனைப் பார்த்துப் பேச ஆரம்பித்தான் :

"எனக்கு இப்போது ஒரே ஓர் ஆசைதான் இருக்கிறது. சாவதற்கு நான் பயப்படவில்லை. ஆனால், அதற்கு முன்னால் ஊருக்குச் சென்று ஒரு தடவையாவது என் அருமைத் தாயையும், அன்புத் தந்தையையும் பார்த்துவிட்டு வரவேண்டும்."

இதைக் கேட்டதும் அரசன் உரக்கச் சிரிக்க ஆரம்பித்தான்.

"வீட்டுக்குப் போகிறானாம்! அப்புறம் திரும்பி வந்து உயிரைக் கொடுக்கிறானாம்! என்னை ஏமாளி என்று நினைத்து விட்டாயா? உன்னை இவ்வளவு கஷ்டப்பட்டுப் பிடித்து வந்தது எதற்காக? திரும்பவும் உன் இஷ்டம்போல் விடுவதற்காகவா?"

"இல்லை, இல்லை. என் பேச்சை நம்புங்கள் அரசே. நிச்சயம் வந்துவிடுவேன்."

"என்ன! எதிரியை நம்புவதா! ஒரு நாளும் முடியாது."

அரசன் இப்படிக் கூறியதும், கைதியின் நண்பன், "அரசே, அவனை நம்புங்கள். இந்த வேண்டுகோளையாவது பூர்த்தி செய்யுங்கள். என்

நண்பன் பொய் சொல்ல மாட்டான். சொன்ன சொல்லை நிச்சயம் காப்பாற்றுவான்.''

'காப்பாற்றுவானு! எப்படிக் காப்பாற்ற முடியும்? அவன் ஊர் என்ன சமீபத்திலா இருக்கிறது! ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. ஆறுகளைக் கடந்து செல்ல வேண்டும்; கடலைக் கடந்து செல்ல வேண்டும்; பெரிய காடுகளை எல்லாம் கடந்து செல்ல வேண்டும். இவற்றை எல்லாம் கடந்து



செல்லுகிறவன் திரும்பி வரவா போகிருன்?''

"அரசே, என் நண்பனை நீங்கள் நம்பலாம். நிச்சயம் திரும்பி வந்துவிடுவான்."

"வந்துவிடுவான், வந்துவிடுவான் என்று சொல்லிவிட்டால் போதுமா? அவன் திரும்பி வராவிட்டால்...? அவனுக்குப் பதிலாக நீ உயிரைக் கொடுக்கத் தயாரா?"

"ஓ! நான் தயார்! என்னைத் தூக்கிலிடுங்கள். அருமை நண்பனுக்காக இந்த அற்ப உயிரை விட நான் என்றும் தயாராயிருக்கிறேன்.

"சும்மா சொல்லிவிட்டால் போதுமா? நான் உன் நண்பனுக்கு 21 நாள் தவணை கொடுக்கிறேன். அந்த 21 நாட்களும் அவனுக்குப் பதிலாக நீ சிறையில் இருக்க வேண்டும். இருபத்து ஓராவது நாள் காலை சூரிய உதயத்திற்குள் உன் நண்பன் திரும்பி வராவிட்டால், நீ தூக்குமேடையில் தொங்க வேண்டியதுதான். சம்மதமா?"

இதைக் கேட்டதும், வந்தவன் முகத்தில் மகிழ்ச்சிக் குறி தோன்றியது.

"அரசே, சம்மதம். என்னைக் கைது செய்யுங்கள். என் நண்பனுக்கு அனுமதி கொடுங்கள்."

இதைக் கேட்டதும், அரசன் ஆச்சரியத்தில் ஆழ்ந்தான். சிறிதுநேரம் அப்படியே அசையாமல் இருந்தான்.

பிறகு, "உம்......சரி, அப்படியே ஆகட்டும்" என்று உத்தரவிட்டான்.

அப்போது கைதி தன் நண்பனை நன்றியுடன் பார்த்தான்.

"நண்பா, நல்ல சமயத்தில் வந்து உதவினாய். உனக்கு எந்தவித ஆபத்தும் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது என் கடமை. எவ்வளவு சீக்கிரத்தில் திரும்பிவர, முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் திரும்பி வந்துவிடுவேன். போய் வரட்டுமா?"

"சரி, போய் வா. என்னைப் பற்றிக் கவலைப் படாதே!" என்று கூறி விடைகொடுத்தான் நண்பன். கைதி ஊரை நோக்கிப் புறப்பட்டான்.

"ஒருநாள், இரண்டு நாள், மூன்று நாள்—இப் படியே பத்தொன்பது நாட்களும் ஓடி விட்டன. இருபதாம் நாள் இரவு நேரம். அரசன் படுக்கைக் குப் போவதற்கு முன்னால் சிறைச் சாலைக்கு வந்தான்

"என்ன, அவன் வந்துவிட்டானா?" என்று காவற்காரர்களைப் பார்த்துக் கேட்டான் அரசன்.

"இல்லை அரசே, இன்னும் வரவில்லை" என்றனர் காவற்காரர்கள்.

"சரி" என்று கூறிவிட்டு, சிறைக்குள்ளே இருக்கும் கைதியின் நண்பனிடம் சென்றான், அரசன். அவனைப் பார்த்துக் கேலியாக ஒரு சிரிப் புச் சிரித்தான். பிறகு பேச ஆரம்பித்தான்.

"என்னப்பா, 'என் நண்பன் பெரிய உத்த மன்; சொன்ன சொல் தவற மாட்டான்; சத்திய வந்தன்; கட்டாயம் வந்துவிடுவான்' என்றெல் லாம் சொன்னாயே! பார்த்தாயா, காலை வாரிவிட்டு விட்டான்."

"அரசே, அவனைப் பற்றி அப்படியொன்றும் தவருக நினைக்காதீர்கள். ஏதேனும் எதிர்பாராமல் நேர்ந்திருக்கலாம். அதனால்தான் இன்னும் வர வில்லை. நிச்சயம் அவன் வந்து விடுவான்."

"இன்னுமா உனக்கு அவன் மேல் நம்பிக்கை? எவனாவது உயிரைக் கொடுப்பதற்குத் திரும்பி வருவானா? அவன் திரும்பி வருவான் என்று நான் நம்பவே இல்லை. சரி, எனக்கென்ன? அவன் வந் தால் நீ பிழைத்தாய்! இல்லாவிட்டால், நாளை உன் உடல் தூக்கு மரத்தில் தொங்கும்; உயிர் எமலோகம் போகும். இது நிச்சயம்."

"அதற்காக நான் கலங்கவில்லை!"

∴ ∴ ∴

மறுநாள் காலை. சூரியன் உதயமாக இன்னும் அரைமணி நேரமே இருக்கிறது.

இன்னும் ஊர் சென்றவன் திரும்பி வர வில்லை!

அவனுக்குப் பதிலாகச் சிறையில் இருப் பவனை அழைத்துக்கொண்டு வரும்படி, அரசன் உத்தரவிட்டான்.

உடனே சேவகர்கள் அவனைக் கொண்டு வந்து அரசன் முன் நிறுத்தினார்கள்.

"இன்னும் அரைமணி நேரமே இருக்கிறது. மனத்தைத் தைரியப்படுத்திக்கொள். தூக்கு மேடைக்கு நீ பலியாகப் போகிருய். உன் நண்பன் உயிர் பிழைக்கப் போகிருன்."

"அரசே, என் நண்பன் பிழைக்கட்டும். அவனுக்காக நான் உயிர் விடுவதைப் பெருமையாகவே நினைக்கிறேன். அவன் உத்தமன்; உண்மையே உரைப்பவன்; வீரன்; தேச பக்தன். இந்த அற்பனின் உயிரைக் காட்டிலும் அவனுடைய உயிர் ஆயிரம் மடங்கு மேலானது. மகிழ்ச்சியோடு நான் தூக்கு மேடைக்குச் செல்கிறேன்."

"செல்ல வேண்டியதுதான்! இனிமேல் அவன் வரப்போவதே இல்லை."

"இல்லை, வந்துவிட்டேன்!" என்று அப்போது ஒரு குரல் கேட்டது.

அரசன் நிமிர்ந்து பார்த்தான். நண்பன் திரும்பிப் பார்த்தான். ஊருக்குச் சென்ற கைதி திரும்பி வந்துவிட்டான்! அவனைக் கண்டதும் அரசன் ஆச்சரியப்பட்டான்.

வியர்க்க விறுவிறுக்க ஓடிவந்த அவன், நண்பனை அப்படியே கட்டிப் பிடித்துக்கொண்டான்.

"நண்பா, நல்லவேளை! கடவுள் கருணை வைத்தார்; சமயத்திற்கு வந்துவிட்டேன்" என்று மகிழ்ச்சியோடு கூறினான்.

"இப்பொழுது நீ ஏன் வந்தாய்? இன்னும் அரைமணி நேரம் கழித்து வரக்கூடாதா? ஐயோ! உன்னைத் தூக்கில் போட்டுவிடுவார்களே! அருமை நண்பா! ஏன் வந்தாய்?"

"ஏன் வந்தேனா? என் சொல்லைக் காப்பாற்ற வந்தேன்; உன் உயிரைக் காப்பாற்ற வந்தேன். நண்பா, எனக்குப் பதிலாக நீ சிறையிலே இருபத்

தோரு நாட்கள் இருந்தாயே! எவ்வளவு துன்பப் பட்டாயோ! உனக்கு வீண் சிரமம் கொடுத்து விட்டேன். எனக்குப் பதிலாக உன்னை வைத்து விட்டுப் போனதே பெரிய தவறு. இதை ஊருக்குப் போன பிறகுதான் உணர்ந்தேன்."

"நண்பா......" அதற்கு மேல் பேச முடிய வில்லை, அந்த நண்பனால்!

"நண்பா, நான் வரும்போது பெரிய புயல் அடித்தது. நான் வந்த படகு புயலில் சிக்கிக் கொண்டு கவிழ்ந்தது. கடவுள் அருள் புரிந்தார் எப்படியோ கஷ்டப்பட்டு ஒரு கட்டையின் உதவி யால் கரை சேர்ந்துவிட்டேன். அதனால்தான் தாமதம். நல்லவேளை; கடலிலே நான் மூழ்கி இறக்க வேண்டியவன்; தப்பிவிட்டேன். இல்லாவிட்டால் அங்கு நான் இறந்திருப்பேன். எனக்குப் பதிலாக இங்கு நீயும் இறந்திருப்பாய்..."

அவர்களுடைய நட்பின் பெருமையை அப் போதுதான் உணர்ந்தான், அரசன். உடனே, அவன் மனம் இளகிவிட்டது! இருந்தாற் போலிருந்து திடீரென்று எழுந்தான்.

நண்பர்கள் இருவரிடமும் ஓடிவந்தான். அவர் களை அப்படியே அணைத்துக் கொண்டான்.


"ஆஹா! உங்களைப் போன்ற நண்பர்களை நான் பார்த்ததே இல்லை! சரித்திரத்திலே படித்தது கூட இல்லை! யாரும் சொல்லக் கேட்டது கூடக் கிடையாது! உங்களுடைய நட்புக்கு மரியாதை செலுத்துகிறேன். இனிமேல் நீங்கள் இருவரும் கைதிகளல்ல; நானும் முன்போல் கொடுங்கோல் அரசனல்ல. நீங்கள் போய்வரலாம்" என்றான்.

"என்ன, உண்மையாகவா!" என்று இருவரும் அரசனைப் பார்த்துக் கேட்டார்கள்.

"ஆம், உண்மைதான்!" என்றான் அரசன்.

உடனே, இருவரும் அரசனுக்கு வணக்கம் செலுத்தினர். ஒருவர் தோள் மேல் ஒருவர் கை போட்டுக்கொண்டு வெளியேறினர்.

அவர்கள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான், அரசன். "ஆகா! இவர்கள் இருவரும் அபூர்வ நண்பர்களே!" என்று அப்போது அவன் வாய் முணுமுணுத்தது.



கிரேக்கக் கதை



# பத்காவது படகோட்டி

கொப்பாட்டும்—இந்தப் பெயர் உங்களுக்குப் புதிதாக இருக்கும். ஆம், இது ஒரு பர்மாக் காரரின் பெயர்.

அந்த பர்மாக்காரர் மிகவும் கெட்டிக்காரர். எவ்வளவு கெட்டிக்காரத்தனம் இருந்தால்தான் என்ன, அதை நல்ல வழியில் உபயோகப்படுத்தினால்தானே பிரயோஜனம்?

பிறரை எப்படி ஏமாற்றுவது, பிறருடைய பொருளை எப்படி எடுத்துக் கொள்வது—இந்த மாதிரி வழிகளிலேயே தமது கெட்டிக்காரத் தனத்தை உபயோகப்படுத்தி வந்தார், அவர்.

அவருக்குச் சொந்தமாகப் பத்துப் படகுகள் இருந்தன. அந்தப் படகுகள் ஐராவதி நதியில் ஓடிக்கொண்டிருக்கும். அடிக்கடி மரம், நெல் மூட்டை முதலியவற்றை ஏற்றிக்கொண்டு கீழ் பர்மாவிலிருந்து மேல் பர்மாவிற்கும், மேல் பர்மா விலிருந்து கீழ் பர்மாவிற்கும் செல்லும்.

அந்தப் படகுகளை ஓட்டுவதற்குப் பத்துப் பட கோட்டிகள் இருந்தார்கள். அவர்களுக்கு மாதம் இவ்வளவு சம்பளம் என்ற கணக்கில்லை. ஒவ் வொரு தடவையும் வேலை முடிந்த பிறகு கொப் பாட்டும் அவர்களுக்குக் கூலி கொடுப்பார். ஒரு வனுக்கு ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் கூலி.

கொப்பாட்டும், படகோட்டிகளுக்கு எப் போதுமே கூலியைச் சரியாகக் கொடுப்பதில்லை.

ஏதாவது அவர்கள்மேல் குறை கூறிக் கூலியைக் குறைத்துவிடுவார்.

"உங்களுக்கு ஒரு ரூபாய் வீதம் கூலி தர முடியாது. நீங்கள் இரவு பகல் 24 மணி நேரமுமா படகோட்டிக் கொண்டிருந்தீர்கள்? தினசரி இரவிலே 8 மணி நேரம் நன்றாகத் தூங்கினீர்களே! அந்த 8 மணி நேரத்திற்கு நான் கூலியைக் குறைத்துக்கொண்டுதான் கொடுப்பேன். சரியாகப் பார்த்தால், உங்களுக்கு நாள் ஒன்றுக்கு முக்கால் ரூபாய்கூட வரவில்லையே!" என்று அவர்களிடம் வீண் வழக்குப் பேசுவார்.

இப்படி ஒவ்வொரு தடவையும், ஏதாவது தகராறு செய்து கூலியைக் குறைத்துவிடுவார். படகோட்டிகள் எவ்வளவோ சொல்லிப் பார்ப்பார்கள். ஆனாலும் கொப்பாட்டும் பிடிவாதமாகவே இருப்பார். வேறு வழியில்லாததால் கொடுத்த கூலியை அவர்கள் வாங்கிக் கொள்வார்கள்.

சாமான்களை ஏற்றிக்கொண்டு படகு செல்லும் போது கொப்பாட்டும் கூடவே செல்வார். ஒவ்வொருநாள் இரவிலும், படகுகளை ஏதாவது ஒரு கிராமத்தின் அருகேயுள்ள கரையில் நிறுத்திவைப்பார்கள். அந்த இரவுகளில் கொப்பாட்டும் சும்மா இருக்கமாட்டார். படகோட்டிகளிடம் ஏதாவது பந்தயம் பேசுவார். பந்தயத்தில் அவர்களைத் தோற்கடிக்கப் பார்ப்பார். அவர்கள் தோல்வி அடையாது போனாலும், ஏதாவது வீண்வழக்குப் பேசி, அவர்கள் தோற்றுவிட்டதாகவே முடிவு கட்டுவார். அவருடைய குணம் நன்றாகத் தெரிந்திருந்ததால், அவர்கள் அநேகமாக அவருடன் பந்தயம் பேசுவதில்லை.

ஒரு நாள் இரவு, ஒரு கிராமத்தின் அருகே யுள்ள கரையில் தங்கியிருந்தார்கள். அப்போது ஜனவரி மாதம், நல்ல குளிர். தண்ணீரில் கையை வைத்தால் பனிக்கட்டி போல் 'ஜில்' லென்று இருக்கும்.

கொப்பாட்டும் அப்போது படகோட்டிகளிடம் 'ஏ படகோட்டிகளே! நீங்கள் ஒவ்வொருவரும் நல்லபலசாலிகளாக இருந்து என்னபிரயோஜனம்? நான் சொல்லுகிறபடி செய்ய முடியுமா? ஒரே ஒரு சிறு துணியை மட்டும் கட்டிக்கொண்டு இந்தத் தண்ணீரில் இறங்க வேண்டும்; இறங்கி நாளைக் காலை சூரியன் உதயமாகும் வரை தண்ணீருக்குள் ளேயே இருக்கவேண்டும். அப்படி எவனாவது இருந்துவிட்டால், நான் அவனுக்கு இரண்டு மடங்கு கூலி தருகிறேன். அவன் தோற்றுப் போய்விட்டால், நான் பைசாகூடக் கூலி தரமாட் டேன். இதற்கு யார் தயார்?'' என்று கேட்டார்.

ஒருவரும் பதில் பேசவில்லை. ஒவ்வொரு பட கோட்டியாக அவர் கேட்டுக்கொண்டே வந்தார்,

'என்னால் முடியாது', 'என்னால் முடியாது' என்று ஒவ்வொருவரும் கூறிவிட்டார்கள். ஆனால், பத்துப் படகோட்டிகளும் அப்படியே கூறிவிட்டார்களா? இல்லை; ஒன்பது படகோட்டி களே அப்படிக் கூறினர். பத்தாவது படகோட் டியை அவர் கேட்டதும், அவன் ''ஓ! நான் தயார்'' என்று தைரியமாகக் கூறினான்.

உடனே சில படகோட்டிகள், ''டேய், உன் னால் முடியாது. வேண்டாம்'' என்றார்கள்.

இன்னும் சிலர் மெதுவாக, "டேய், உனக்குத் தான் கொப்பாட்டும் குணம் தெரியுமே! எதற்காகப் பந்தயத்தில் இறங்க வேண்டும்? வேண்டாமடா!" என்று புத்தி கூறினார்கள்.

ஆனால், கொப்பாட்டும் அவர்களைப் பேசவிடவில்லை. "அதெல்லாம் முடியாது. அவன் பந்தயத்துக்கு ஒப்புக் கொண்டுவிட்டான். அவன் உடனே தண்ணீரில் இறங்க வேண்டியதுதான்" என்று கத்தினார்.

உடனே, பத்தாவது படகோட்டி சிறிதும் தயங்கவில்லை. பேசாமல் ஒரு சிறு துணியைக் கட்டிக்கொண்டு நதியில் இறங்கிவிட்டான். இரவு முழுவதும் அவன் பல்லைக் கடித்துக் கொண்டு தண்ணீருக்குள்ளேயே இருந்தான்.

காலை மணி 4 இருக்கும். அப்போதும் அவன் குளிரைத் தாங்கிக்கொண்டு தைரியமாகவே உள்ளே இருந்தான்.

கொப்பாட்டும் பார்த்தார். "சரி, இவன் நம்மிடம் இரண்டு பங்கு கூலி வாங்கினாலும் வாங்கி விடுவான். இவனுடன் எப்படியாவது தகராறு செய்யவேண்டும். அப்போதுதான் நாம் வெற்றி பெறலாம்" என்று திட்டமிட்டார்.

உடனே, அவர் கிராமத்துப் பக்கம் திரும்பிப் பார்த்தார். பிறகு, தண்ணீருக்குள் இருக்கும் பத்தாவது படகோட்டியைப் பார்த்தார்.

"டேய் திருட்டுப் பயலே, நீ இவ்வளவு குளிரிலும் இந்தத் தண்ணீருக்குள் கவலையில்லா

மல் இருப்பதன் மர்மம் எனக்குத் தெரியும். யாரை ஏய்க்கப் பார்க்கிறாய்?" என்று கேட்டார்.

இதைக் கேட்டதும், பத்தாவது படகோட்டிக்குத் தூக்கி வாரிப்போட்டது. "என்ன எஜமான், நீங்கள் சொல்லுவது ஒன்றும் புரியவில்லையே! மர்மமா! அது என்ன?"




என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

"ஆம். அதோ பார், அங்கே நெருப்பு 'குபு குபு' என்று எரிந்து கொண்டிருப்பதை! அந்த உஷ்ணம் உன்மேல் படுகிறது. அதனுல்தான் இந்தக் குளிரிலும் இவ்வளவு தைரியமாக நீ உள்ளே இருக்கிருய்" என்று கூறினுர், கொப் பாட்டும். உடனே எல்லோரும் அந்தப் பக்கம் பார்த்தனர். அரை மைல் தூரத்தில் நெருப்பு எரிந்து கொண்டிருப்பது நன்ருகத் தெரிந்தது.

செம்படவர்கள் மீன் பிடிக்கப் போவதற்கு முன்னுல் குளிர் காய்வது வழக்கம். மட்டைகளை யும், இலைகளையும் வைத்து எரிப்பார்கள். அதைப் பார்த்துவிட்டுத்தான் கொப்பாட்டும் அப்படிக் கூறினுர்.

உடனே, பத்தாவது படகோட்டி, "இது என்ன எஜமான், நீங்கள் சொல்லுவது வேடிக்கை யாக இருக்கிறதே! நெருப்பு எங்கோ எரிகிறது; நான் இங்கே இருக்கிறேன்! எப்படி அந்த உஷ் ணம் என்மேல் படும்?" என்ருன்.

"அதெல்லாம் இல்லை. அந்த உஷ்ணம் உன் மேல் படுவதால்தான்,உன்னுல் இந்த நேரத்திலும் இப்படி இருக்க முடிகிறது. இல்லாவிட்டால்



யாரால் இருக்க முடியும்? யானையால்கூட இருக்க முடியாதே!'' என்று கோணல் வழக்குப் பேசினார், கொப்பாட்டும்.

பத்தாவது படகோட்டி எவ்வளவோ சொல்லிப்பார்த்தான். பலன் இல்லை; உடனே, மற்றப் படகோட்டிகள், "ஏண்டா, சொன்னால் கேட்டால்தானே! ஏன் பந்தயத்திற்குப் போனாய்?'' என்றார்கள்.

பத்தாவது படகோட்டிக்கு வெட்கமாகப் போய்விட்டது. பேசாமல் எழுந்து வெளியே வந்துவிட்டான். வரும்போதே கொப்பாட்டுமுக்கு எப்படியாவது புத்தி கற்பிக்க வேண்டும் என்று அவன் எண்ணினான்.

சிறிது நேரம் யோசித்தான்.

பிறகு, "நான் இதில் தோற்றுப்போனது உண்மைதான். இப்படி எத்தனையோ தடவைகள் நான் தோற்றுப் போயிருக்கிறேன். ஆனாலும், ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் என்னைத் தோற்கடிக்கவே முடியாது!' என்று மற்றப்படகோட்டிகளிடம் சப்தம் போட்டுக் கூறினான்.

''என்ன! முடியாதா? அது என்ன விஷயம்?'' என்று கொப்பாட்டும் ஆத்திரத்துடன் கேட்டார்.

"இரண்டு நாள் முன்பு, நான் பன்றிக் 'கறி வறுவல் செய்திருந்தேன். அது எப்படி இருந்தது? அதேபோல் அரைமணி நேரத்துக்குள் வறுவல் செய்ய உங்களால் முடியுமா? முடியவே முடியாது!''

"ஏன் முடியாது? என்ன பந்தயம்!''

"நான் தோற்றுப் போனால், உங்களிடம் ஏழு வருஷம் அடிமையாக இருக்கிறேன். நீங்கள் தோற்றுப் போனால், உங்களுடைய பத்துப் படகு களையும் எனக்கே தந்து விடவேண்டும்"

"சரி, அப்படியே. ஆனால், நீ வாக்குத் தவறக் கூடாது. பந்தயம் நன்றாக ஞாபகத்தில் இருக் கட்டும்."

"சரி, நெருப்பு எங்கே?" என்று கேட்டார், கொப்பாட்டும். "நெருப்பா! அது எதற்கு? அது தான் அதோ, அங்கே தெரிகிறதே! இங்கிருந்து கொண்டே அந்த உஷ்ணத்தில் வறுவல் செய்ய லாம். சும்மா செய்யுங்கள்" என்று தூரத்தில் எரிந்து கொண்டிருந்த நெருப்பைக் காட்டிக் கூறினான் படகோட்டி,

"என்னடா இது! முட்டாள், அது எப்படி முடியும்? நெருப்பு எங்கோ இருக்கிறது! நாம் இங்கே இருக்கிறோம்; அந்த நெருப்பில் எப்படி வறுவல் செய்ய முடியும்?" என்று கேட்டார் கொப்பாட்டும்,


"ஏன் முடியாது, எஜமான்? அந்த உஷ்ணம் இங்கு நன்றாகப் படுவதாக நீங்கள்தானே சொன் னீர்கள்! அதில் நீங்கள் தாராளமாக வறுவல் செய்யலாம். உம், ஆரம்பியுங்கள்" என்றான் படகோட்டி,

கொப்பாட்டுமுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. ஆயினும், தோல்வியை அவர் அவ்வளவு சீக்கிரம் ஒப்புக்கொண்டு விடுவாரா? ஏதேதோ வம்பு பேசினார். ஆனால், மற்றப்

படகோட்டிகள் அப்போது சும்மா இருக்கவில்லை. பத்தாவது படகோட்டியுடன் அவர்களும்சேர்ந்து கொப்பாட்டுமை மிரட்டி, தோல்வியை ஒப்புக் கொள்ளச் செய்தார்கள். வேறுவழி இல்லாததால் கொப்பாட்டும் தம்முடைய பத்துப் படகுகளையும் பத்தாவது படகோட்டியிடம் கொடுக்கும்படி ஆகிவிட்டது.

பத்தாவது படகோட்டி அந்தப் பத்துப்படகு களையும் தானே எடுத்துக்கொண்டானு? இல்லை, இல்லை. தன் நண்பர்கள் பத்துப் பேருக்கும் ஆளுக்கு ஒரு படகாகக் கொடுத்துவிட்டான்.

இப்போது, ஒவ்வொரு படகோட்டியும் ஒவ்வொரு படகுக்குச் சொந்தக்காரன் !



பர்மியக் கதை



# பணத்தின் மகிமை

ஹாஸனின் மனைவி பாத்திமா.

ஹாஸனும், பாத்திமாவும் எப்பொழுது பார்த்தாலும் பணம், பணம் என்றே ஜபம் செய்து கொண்டிருப்பார்கள். இந்த உலகத்திலுள்ள செல்வத்தை யெல்லாம் கொண்டுவந்து அவர்களுக்குக் கொடுத்தால்கூட அவர்களின் ஆசை தீராது. அவ்வளவு பேராசை!

ஹாஸனுக்கு அரண்மனையில் வேலை. அரண்மனை வேலை என்றால் என்ன? மந்திரி வேலையா? இல்லை; எடுபிடி வேலைதான்! ஆனாலும், அவனுக்கு நல்ல சம்பளம் கிடைத்து வந்தது. எவ்வளவு சம்பளம் கிடைத்தால்தான் என்ன, அந்தப் பணத்தில் பைசா செலவிடுவதானாலும், ஹாஸனுக்கோ, பாத்திமாவுக்கோ மனம் வராது. எந்த எந்த வழிகளில் மிச்சம் பிடிக்கலாம்; எப்படி எப்படிப் பணம் சம்பாதிக்கலாம் என்பதைப் பற்றியே அவர்கள் அடிக்கடி யோசனை செய்வார்கள். நல்ல சாப்பாடு சாப்பிடமாட்டார்கள்; நல்ல உடை உடுத்தமாட்டார்கள். எப்பொழுது பார்த்தாலும், பிச்சைக்காரர்கள் போலவே காட்சி அளிப்பார்கள்.

இப்படியே அவர்கள் மிச்சம் பிடித்து ஒரு பானை நிறையப் பணம் சேர்த்துவிட்டார்கள். ஒரு பானை நிறையப் பணம் சேர்த்துவிட்டால் போதுமா? இன்னும் மூன்று பானைகள் வீட்டிலே

இருக்கின்றனவே! அவைகளையும் பணத்தால் நிரப்பிவிடவேண்டுமென்று ஆசைப்பட்டார்கள், ஹாஸனும் பாத்திமாவும். அதற்கு வழி என்ன? இருவரும் யோசனை செய்தார்கள்.

அன்று ஹாஸனுக்கு ஒரு யோசனை உதயமாயிற்று. உடனே, "பாத்திமா! நான் ஒரு யோசனை சொல்கிறேன். அதுபோல் செய்கிறாயா?" என்று கேட்டான்.

பாத்திமா 'மாட்டேன்' என்றா சொல்லுவாள்? "என்ன யோசனை? சொல்லுங்கள், சொல்லுங்கள்" என்று ஆவலோடு கேட்டாள்.

உடனே ஹாஸன் சொல்ல ஆரம்பித்தான்: "பாத்திமா, நீ கடைத் தெருவுக்குப் போகவேண்டும். போகும்போதே தலையை விரித்துப் போட்டுக்கொள். கண்களிலே கண்ணீரை வரவழைத்துக்கொள். அங்குள்ள கடைக்காரர் ஒவ்வொருவரிடமும் சென்று, 'ஐயா, என்னுடைய தலைவிதி இப்படியா ஆகவேண்டும்? என் கணவனை அரசர் விசாரணை எதுவும் இல்லாமல் சிறையில் போட்டுவிட்டார். சாப்பாட்டுக்கே வழியில்லாமல் நான் திண்டாடுகிறேன். நீங்கள் தான் ஏதாவது உதவி செய்யவேண்டும்' என்று கெஞ்சிக் கேள். நிச்சயம் அவர்கள் உனக்கு ஆகாரமும் பணமும் தருவார்கள். ஆகாரத்தை இருவரும் சாப்பிடலாம். பணத்தைப் பானையில் போட்டு வைக்கலாம். எப்படி என் யோசனை?" என்று கேட்டான்.

"ஆஹா! அற்புதமான யோசனைதான்... ஆனால், அவர்கள் உங்களை நேரில் பார்த்துவிட்டால்...?"

"அதைப் பற்றிக் கவலைப்படாதே! நான் கோழி கூவும் முன்பே அரண்மனைக்குப் போய் விடுவேன். கடைகளெல்லாம் மூடிய பிறகே வீடு திரும்புவேன். அரண்மனையில் இருப்பவர்களைத் தவிர மற்ற எவருடைய கண்களிலும் நான் தென்படமாட்டேன்."

"சரி, அப்படியே செய்யலாம். நாளையி லிருந்தே நான் இந்த வேலையை ஆரம்பித்து விடுகிறேன்" என்ருள் பாத்திமா.

அப்படியே ஆரம்பித்து விட்டாள். தலைவிரி கோலத்துடனும், நீர் வழியும் கண்களுடனும் ஒவ்வொரு கடையாகச் சென்ருள். ஹாஸன் சொல்லிக் கொடுத்தது போலவே புளுகினுள். கடைக்காரர்கள் அவளுடைய புளுகை உண்மை யென்றே நம்பிவிட்டார்கள்; இரக்கம் காட்டினுர் கள்; உணவு, உடை, பணம் முதலியவற்றைக் கொடுத்து உதவினுர்கள். அன்று வீடு திரும்பும் போது பாத்திமாவுக்கு அளவில்லாத ஆனந்தம்.

ஊர் அடங்கிய பிறகு வீடுவந்து சேர்ந்தான், ஹாஸன். பாத்திமா சம்பாதித்து வந்திருந்த உணவு, உடை, பணம் முதலியவற்றைக் கண்ட தும், அவன் பெருமகிழ்ச்சி அடைந்தான்.

மறுநாளும் பாத்திமா கடைவீதிக்குச் சென் ருள். முதல்நாள் புளுகியது போலவே புளுகினுள். அன்றும் நல்ல வருமானம் கிடைத் தது. இப்படியே தினமும் செய்துவந்தாள்.

எவ்வளவு நாட்களுக்குத்தான் இப்படிச் செய்யமுடியும்? கடைக்காரர்கள் அலுத்துப்போய்

விட்டார்கள். வெறுத்துத் துரத்த ஆரம்பித்தார்கள். "சேச்சே, போ, போ! உனக்கு வேறு வேலை இல்லை. இனிமேல் இந்தப் பக்கம் தலைகாட்டவே கூடாது. தினசரி உனக்கு அள்ளிக் கொடுக்க, இங்கே என்ன கொட்டியா கிடக்கிறது? உனக்கு உறவினர் ஒருவர்கூட இல்லையா? அவர்களிடத்திலே போய் உன் கஷ்டத்தைச் சொல்லேன்" என்று எரிந்து விழுந்தார்கள்.

பாத்திமாவுக்கு அன்று வரும்படி கிடையாது. தலை குனிந்தபடியே வீடு திரும்பினாள். அன்று இரவு ஹாஸனிடத்திலே நடந்ததைச் சொன்னாள்.

ஹாஸன் அவள் கூறியதைக் கவனமாகக் கேட்டான். பிறகு, "சரி, அதற்காக என்ன? அவர்கள் நம் உறவினர் வீட்டுக்குத்தானே போகச் சொன்னார்கள்? அதுவும் நல்ல யோசனைதான். நாளையிலிருந்து நீ என்ன செய்யவேண்டும், தெரியுமா? நம் உறவினர்கள் ஒவ்வொருவரையும் போய்ப் பார்த்து, நான் சிறையில் இருப்பதாகக் கூற வேண்டும். என்னை மீட்பதற்குப் பண உதவி வேண்டும் என்று கெஞ்ச வேண்டும். அவர்கள் பணம் தருவார்கள். அந்தப் பணத்தைப் பத்திரமாகக் கொண்டுவந்து வீடு சேர்க்க வேண்டும். எப்படி என் யோசனை?" என்றான்.

உடனே, பாத்திமாவின் முகத்திலே மகிழ்ச்சி தாண்டவமாடியது. "சரி, நாளையே போகிறேன்" என்றாள்.

மறு நாள் முதல், ஒவ்வொரு உறவினர் வீடாகச் சென்று ஹாஸன் சொல்லிக் கொடுத்தது போல் சொன்னாள். அவர்களும் அவளுடைய

பேச்சை நம்பிவிட்டார்கள்! தங்களால் முடிந்த உதவியைச் செய்தார்கள்; உறவினர்களில் ஒருவரைக் கூட அவள் விடவில்லை. எல்லோரிடமும் 'வசூல்' செய்து விட்டாள்! இப்படியே சில நாட்கள் செய்து வந்தாள். எவ்வளவு நாட்கள்தான் இப்படியும் செய்ய முடியும்? உறவினர்களுக்கு அவள் பேரில் சந்தேகம் ஏற்பட்டது. வரவர சந்தேகம் வலுத்தது. "ஹாஸன் சிறையில் இருப்பதாகத் தெரியவில்லை. இவள் பொய் சொல்லுகிறாள்" என்று சிலர் பேசிக் கொண்டார்கள்.

இந்தச் செய்தி பாத்திமாவுக்கு எப்படியோ எட்டிவிட்டது. "சரி, இனி இவர்களிடம் சென்றால் ஆபத்து! உள்ளதையும் பிடுங்கிக்கொண்டு விரட்டி விடுவார்கள்" என்று எண்ணினாள். உடனே, நேராக வீட்டுக்கு வந்துவிட்டாள்.

ஹாஸனிடம் நடந்தவற்றைக் கூறினாள். ஹாஸன் மிகுந்த வருத்தம் அடைந்தான். "சரி, வேறு ஏதாவது வழி இருக்கிறதா என்று பார்க்கலாம்" என்று பெருமூச்சுடன் கூறினான்.

மறுநாள் இரவு அரண்மனையிலிருந்து ஹாஸன் வீட்டுக்கு வந்ததும், வாய்க்குள்ளிருந்து எதையோ எடுத்தான். பாத்திமா அதைப் பார்த்தாள்.

"ஆ! இது என்ன! வைர மோதிரம்!" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"உஸ்...சப்தம் போடாதே! இதை நான் அரண்மனையிலிருந்து கிளப்பிக் கொண்டுவந்து விட்டேன்" என்று மெதுவாகக் கூறினான் ஹாஸன்.

"ராஜாவுக்குத் தெரிந்தால்...?"

"ஆமாம், இந்த மோதிரத்தைத்தான் அவர் ஞாபகம் வைத்துக்கொண்டிருக்கப் போகிறாராக்கும். அவருக்கு எத்தனையோ மோதிரங்கள்! இதைப் பற்றி அவர் நினைக்கக்கூட மாட்டார்" என்று கூறிவிட்டான் ஹாஸன்.

அன்று முதல், தினசரி வீட்டுக்கு வரும்போது அரண்மனையிலிருந்து ஏதாவது ஒரு விலை உயர்ந்த பொருளை அவன் எடுக்காமல் வரமாட்டான். பாத்திமாவும், "இன்று என்ன கொண்டு வரப்போகிறாரோ!" என்று ஆவலுடன் எதிர் பார்ப்பாள்.

இப்படியே இந்தத் திருட்டு வேலை பல நாள் நடந்து வந்தது. ஹாஸனும் தந்திரமாக இதைச் செய்துவந்தான்.

ஒரு நாள் ஹாஸன் தன் மனைவியிடம், "பாத்திமா, இந்த நகைகளை நாம் விற்றுப் பண மாக்கிவிடவேண்டும். ஆகையால், நான் இவை களை ஒரு மூட்டை கட்டி எடுத்துக்கொண்டு வெகு தூரத்திலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போகிறேன்" என்றான்.

"வேண்டாம். வெளியூர் போனால் பணச் செலவு! உள்ளூரிலேயே நான் கொஞ்சம் கொஞ்ச மாக விற்று விடுகிறேன். யாராவது கேட்டால் உறவினர் கொடுத்ததாகக் கூறிவிடலாம்" என் றாள் பாத்திமா.

"ஆமாம். நீ சொல்வது சரி" என்றான் ஹாஸன்.

மறுநாள் காலை நேரம். பாத்திமா தங்கக் காப்பு ஒன்றை எடுத்துக்கொண்டு கடை வீதிக்குச் சென்றாள். அங்கு அவள் அதை விற்கப் போகும் சமயத்தில், அரண்மனைச் சேவகன் ஒருவன் பார்த்துவிட்டான்! உடனே, அவள் அருகிலே வந்து காப்பை வாங்கிப் பார்த்தான். அதில் அரண்மனை முத்திரை இருந்தது. அந்த இடத்திலேயே பாத்திமா கைது செய்யப்பட்டாள்.


அவளை அடித்து உதைத்துக் கேட்டார்கள். அவள் உண்மையைக் கூறிவிட்டாள். அரண்மனையில் வேலைபார்க்கும் ஹாஸன்தான் இதற்குக் காரணம் என்பது தெரிந்தது. உடனே ஹாஸனையும் கைது செய்தார்கள். அவர்களுடைய வீட்டைச் சோதனை செய்தார்கள். அரண்மனைச் சாமான்கள் அங்கே ஏராளமாக இருந்தன!

உடனே, அங்கிருந்த பொருள்கள் எல்லாவற்றையும் சேவகர்கள் எடுத்துக்கொண்டார்கள். ஹாஸனையும், பாத்திமாவையும் அரசன் முன் கொண்டுவந்து நிறுத்தினார்கள்.

இதற்குள், இந்தச் செய்தி ஊரெங்கும் பரவி விட்டது. கடைக்காரர்களும், பாத்திமாவின் உறவினர்களும் ஆத்திரப்பட்டார்கள். எல்லோரும் உடனே அரண்மனைக்கு ஓடிவந்து நடப்பதைக் கவனித்தார்கள்.

ஹாஸனும், பாத்திமாவும் செய்த குற்றத்தை அரசன் தீர விசாரித்தான். முடிவில் தீர்ப்புக் கூற ஆரம்பித்தான்.

"நீங்கள் கடைக்காரர்களை ஏமாற்றிப் பொருள் சேர்த்தீர்கள். இது முதல் குற்றம். இதற்



காக உங்களுக்கு
அதிகமான அபரா
தம் விதிப்பதோடு,
பல ஆண்டுகள்
சிறையில் போட
வேண்டும். உங்கள்

உறவினரிடம் பொய் கூறி, பண உதவி பெற்றீர்கள். இது இரண்டாவது குற்றம். இதற்காக உங்களை நன்ருக அடி அடி என்று தோல் உரியும் வரை அடிக்க வேண்டும். அரண்மனைப் பொருள்களைக் கொள்ளை அடித்தீர்கள். இது மூன்ருவது குற்றம். இதற்காக உங்களுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும்!".

இதை அரசன் கூறியதுமே ஹாஸனும், பாத்திமாவும் நடுநடுங்கினர்; கண்ணீர் விட்டனர்; அரசன் காலடியில் விழுந்து மன்னிப்புக் கேட்டனர்.

அப்போது அரசன் அவர்களைப் பார்த்து, "ஆனுல், ஒரே ஒரு நிபந்தனை. அதன்படி செய்தால், உங்களுக்கு இந்தத் தண்டனைகள் கொடுக்கமாட்டேன். அது என்ன நிபந்தனை தெரியுமா ? நீங்கள் மோசம் செய்து சம்பாதித்த இவ்வளவு பொருள்களையும் நீங்களே எடுத்துக் கொண்டு வீடு செல்ல வேண்டும். ஆமாம், இப்போதே உங்கள் இருவர் கழுத்திலும் கட்டி விடச் சொல்கிறேன்" என்ருன்.

இதை அரசன் கூறியதும் ஹாஸனுக்கும், பாத்திமாவுக்கும் ஒரே ஆச்சரியமாக இருந்தது. அவர்கள் தங்களுடைய காதுகளை நம்பவில்லை. "நிஜமாகவா !" என்று அவர்கள் மனத்திற்குள்ளே கேட்டுக்கொண்டனர்.

அப்போது, அரசன் மேலும் கூற ஆரம்பித்தான். "இந்த ராஜ்யத்தில் ஆணே, பெண்ணே, குழந்தையோ — யாராக இருந்தாலும் சரி;

அவர்கள் இந்த இருவரிடமிருந்தும் ஒரு காசுகூட வாங்கக்கூடாது. அப்படி யாராவது வாங்கினால், அவர்களுக்கு நிச்சயம் தூக்குத் தண்டனை தான் கிடைக்கும். இது நம் உத்தரவு'' என்றான்.

ஹாஸனுக்கும், பாத்திமாவுக்கும் அளவில்லாத மகிழ்ச்சி. "அரசர் நமக்கு எல்லாவற்றையும் திருப்பிக் கொடுத்துவிட்டார். அத்துடன் நம்மிடமிருந்து எவரும் ஒரு காசுகூட வாங்கக் கூடாது என்றும் கடுமையான உத்தரவு போட்டிருக்கிறார். அடடா, அவர் எவ்வளவு நல்ல அரசர்! நம்முடைய பணத்திற்கு இனி எவனும் ஆசைப்படமாட்டான். கொள்ளைக்காரர்களைப் பற்றிய கவலையே இல்லை!'' என்று எண்ணி எண்ணி மகிழ்ந்தனர்.

அன்று முதல், அவர்கள் வீட்டு வாசலில் அரண்மனைச் சேவகர்கள் காவல் புரிந்தனர். அவர்கள் போகும் இடத்திற்கெல்லாம் சேவகர்களும் கூடவே சென்றனர்.

இதனால் அவர்களை நெருங்குவதற்குக்கூடப் பொதுமக்கள் அஞ்சினர். கடையில் சென்று அவர்கள் விலைக்கு ஏதாவது சாமான் கேட்டால், கடைக்காரர்கள், "அடேயப்பா! நாங்கள் தர மாட்டோம். உங்கள் பணத்தை வாங்கினால் எங்கள் உயிருக்கு ஆபத்து! போய்வாருங்கள்'' என்று கூறினர்.

இப்படியே அவர்கள் எதை வாங்கப்போனாலும் கிடைப்பதில்லை. நாள் ஆக ஆக அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். பணத்தைக் கொடுக்கத் தயாராயிருந்தும் சாப்பிட ஆகாரம் கிடைக்கவில்லை; உடுக்க உடை கிடைக்கவில்லை;

எப்படி வாழ்க்கை நடத்துவது? சிறிது காலம் பச்சைக் காய்களையும் கிழங்குகளையும் சாப்பிட்டு வந்தார்கள். எவ்வளவு நாட்கள்தான் இப்படியே காலம் தள்ள முடியும்? 'பணமிருந்தும், பரதேசியைக் காட்டிலும் கேடு கெட்ட நிலையில் வாழ வேண்டியிருக்கிறதே!'' என்ற உணர்ச்சி அப்போதுதான் அவர்களுக்குத் தோன்றியது. இப்படியே இருந்தால், சீக்கிரம் செத்துச் சுடுகாடு சேர வேண்டியதுதான் என்பதை அறிந்தார்கள்.

கடைசியாக அவர்கள் தங்களிடமிருந்த பொருள்களையெல்லாம் இரண்டு மூட்டைகளாகக் கட்டினார்கள். ஆளுக்கு ஒன்றாக எடுத்துக் கொண்டு அரண்மனையை நோக்கி நடந்தார்கள். அரசனின் காலடியில் போய் விழுந்தார்கள்.

"அரசே! இந்தப் பொருள்களையெல்லாம் யாராவது எடுத்துக்கொள்ளட்டும். எங்களுக்கு இந்தப் பொருள்களில் எதுவுமே வேண்டாம். எங்களுக்கு ஏதாவது வேலை கொடுங்கள். நியாயமாக உழைத்து, நியாயமாகச் சம்பாதித்து எல்லோரையும் போல் உண்டு, உடுத்து அமைதியாக வாழ்கின்றோம்'' என்று கெஞ்சிக் கேட்டனர்.

அரசன் உடனே சேவகர்களை அழைத்தான். ''இந்த இரண்டு மூட்டைகளையும் எடுத்துச் செல்லுங்கள். இவர்களிடம் ஏமாந்த கடைக்காரர்களிடம் ஒரு மூட்டையையும், உறவினர்களிடம் மற்றொரு மூட்டையையும் கொடுத்து விடுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

பிறகு ஹாஸனையும் பாத்திமாவையும் பார்த்து, இப்பொழுதாவது பணத்தின் மகிமை தெரிகி

றதா? பணம் என்பது ஒரு சின்னம்தான். அதை எவ்வளவுக்கு எவ்வளவு நல்ல வழிகளில் உபயோகப்படுத்துகிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதற்கு மகிமை உண்டு; நமக்கும் மகிழ்ச்சி உண்டு. பெட்டியிலோ, அல்லது பையிலோ உண்ணாமல், உடுத்தாமல் சேர்த்து வைத்திருந்தால் அதற்கும் மகிமை கிடையாது; நமக்கும் மகிழ்ச்சி கிடையாது. இப்போதாவது இதைத் தெரிந்து கொள்ளுங்கள்'' என்றான்.

"ஆம் அரசே, ஆம். இப்பொழுது நன்றாகத் தெரிந்து கொண்டோம்'' என்றனர் ஒரே குரலில் ஹாஸனும் பாத்திமாவும்.



அரேபியக் கதை

# குழந்தைக் கவிஞர் வள்ளியப்பாவின்
## சில புத்தகங்கள்

### பாடல்கள்

| | | |
|---|---|---|
| *சிரிக்கும் பூக்கள்* | ரூ. | *20 00* |
| *மலரும் உள்ளம்—முதல் தொகுதி* | ரூ. | *8 00* |
| *மலரும் உள்ளம்—2-ஆம் தொகுதி* | ரூ. | *12 00* |
| *ஈசாப் கதைப் பாடல்கள்* | ரூ. | *8 00* |
| *நேரு தந்த பொம்மை* | ரூ. | *2 00* |
| *கதைப் பாடல்கள்* | ரூ. | *10 00* |
| *பாட்டிலே காந்தி கதை* | | *(அச்சில்)* |

### கதைகள்

| | | |
|---|---|---|
| *பர்மா ரமணி* | ரூ. | *4 00* |
| *மணிக்கு மணி* | | *(அச்சில்)* |
| *நீலா—மாலா* | ரூ. | *6 00* |
| *வேட்டை நாய்* | ரூ. | *4 00* |

### வாழ்க்கை வரலாறுகள்

| | | |
|---|---|---|
| *பெரியோர் வாழ்விலே—முதல் தொகுதி* | ரூ | *3 00* |
| *பெரியோர் வாழ்விலே-2-ஆம்-தொகுதி* | ரூ. | *3 00* |
| *சின்னஞ் சிறு வயதில்* | ரூ. | *3 00* |
| *பிள்ளைப் பருவத்திலே* | ரூ. | *6 00* |

### நாடகம்

| | | |
|---|---|---|
| *வெற்றிக்கு வழி* | ரூ. | *4 50* |

### மற்றவை

| | | |
|---|---|---|
| *எங்கள் கதையைக் கேளுங்கள்* | ரூ. | *4 00* |
| *வெளிநாட்டு விடுகதைகள்* | ரூ. | *2 00* |

## பாரி நிலையம்

**184, பிராட்வே, சென்னை-108**

# இப்புத்தகம் சொல்லும் கதைகள்



பண ஆசை பிடித்துத் தவறான வழிகளில் பணம் சேர்க்கிறார்கள் கணவனும் மனைவியும். அந்தப் பணத்திற்கு மகிமையே இல்லாமல் செய்து விடுகிறான் அந்த நாட்டு அரசன்.

வீரச் சிறுவன் ஒருவன் பொல்லாத வேட்டை நாயுடன் போராடி வெற்றி பெறுகிறான். பிற்காலத்தில், அவன் அயர்லாந்து தேசத்தின் பெரிய வீரர்களிலே ஒருவனாக விளங்குகிறான்!





பிறரை ஏமாற்றுவதிலும் கோணல் வழக்குப் பேசுவதிலும் கைதேர்ந்தவன் அந்த முதலாளி. அவனையே புத்தியால் வென்று விடுகிறான் பத்தாவது படகோட்டி.

உயிர் பெரிதா? நட்பு பெரிதா? உயிரைக் காட்டிலும் நட்புத்தான் பெரிது என்பதை வாயால் கூறவில்லை; செய்கையில் காட்டி விட்டார்கள் இரு அபூர்வ நண்பர்கள்!

